This book is protected by copyright act. Please do not share this download with others.

இந்தப் புத்தகம் உரிமை பதிவு செய்யப்பட்டது. இதனை மற்றவருக்கு இணையம் மூலம் அனுப்புதல் கூடாது.

# அனுமதி

www.writersujatha.com

ராமதுரை.

அபிராமி அந்தாதியின் "நூல் பய"னில் தேடித் தேடிப் பார்த்தார். நல்வித்தையும் ஞானமும் பெற, பிரிந்தவர் ஒன்று சேர, அகால மரணமும் துர் மரணமும் உண்டாதிருக்க என்று நூறு பலன்கள் போட்டிருந்தாலும் 'பிள்ளைக்கு வேலை கிடைக்க'த் தோதாக எந்தப் பாட்டும் இல்லை. "அபிராமி பட்டர் காலத்தில் வேலை கிடைப்பது அத்தனை கஷ்டமில்லை போலும்" என்று எண்ணினார். அதே சமயம் இவ்வாறு எண்ணுவதே பாவம், தப்பு என்று பட்டு சந்தேகத்துக்குக் "கொள்ளேன் மனத்தில் நின்கோலமல்லாது" என்று தொடர்ந்து சொல்லிவிட்டு பூஜை அறையிலிருந்து வெளியே வந்தபோது, மேஜை மேல் மந்தரா இலையில் இட்லி சட்னி பொட்டலம் காத்திருந்தது. மகாலட்சுமி அடுத்த வீட்டில் ஸ்டார் டிவி பார்க்கச் சென்றிருக்க, பாலாஜி அப்போதுதான் எழுந்து பல் துலக்கிக் கொண்டிருந்தான். "பொறுப்பில்லாமல் இருக்கிறானே' என்று ஆத்திரம் வந்தாலும் காதல், கீதல் என்று எதுவும் ஆரம்பிக்காமல் ஒழுங்காக லைப்ரரி போய் 'பார்ட்டைம்' செய்து விட்டு வீட்டுக்கு வருகிறானே, அதுவே பாக்யம் என்று மனத்தில் நிம்மதி இருந்தது, இவனுக்குக் கல்யாணம் பண்ண வேண்டும் அதற்கு அபிராமி அந்தாதியில் நல்ல பாட்டு இருக்கிறது. 'திங்கட் பகவின் மணம் நாறும் சீரடி சென்னி வைக்க;– ஆனால், மகன் பாலாஜி என்னும் விசுவநாதனுக்கு வேலை கிடைப்பது இரண்டு வருஷம் இழுத்தடித்துக் கொண்டு போய்விட்டது. போன வருஷம் பல நிறுவனங்களுக்கு மனுப் போட்டு, அனுமதிப் பரிட்சை எழுதினான். எதிலும் கிடைக்கவில்லை. சிரத்தையுடன் படிக்கவில்லை என்றுதான் தோன்றியது. அதைக் கேட்கவும் தயக்கமாக இருந்தது. கோபக்காரன் சண்டை போட்டுக் கொண்டு வீட்டை விட்டு ஓடிப் போய் விட்டானானால்? ஒரே பையன். "இந்த வருஷம் எப்படியாவது கொஞ்சம் கஷ்டப்பட்டு படிச்சுடேன் பாலாஜி" என்றார். அவன் 'எம்ப்ளாய்மென்ட் ந்யூ'ஸை விரக்தியுடன் பார்த்துக் கொண்டு "என்னப்பா இத்தனை வருஷம் படிச்சு பாஸ் பண்ணி மறுபடியும் வேலைக்குப் பரிட்சைன்னா போர் அடிச்சுப் போச்சுப்பா; அலுத்துப் போச்சாப்பா" என்றான். லட்சுமி ஹாங்காங் பணக்காரர்கள் இல்லங்களைத் துறந்துவிட்டு அப்போதுதான் உள்ளே வந்தாள்.

"பின்னே என்னதான் செய்யறதா உத்தேசம்?"

"நான் உங்களுக்கு பாரமா இருக்கேன்?"

"இல்லை; இருந்தாலும் படிப்பு முடிஞ்சு ரெண்டு வருஷம் ஆச்சேனு."

"வேலை, கல்யாணம், பிள்ளை பெத்துக்கறது, அப்பா இதானா வாழ்க்கையில குறிக்கோள்."

"வேற எதாவது இருந்தா சொல்லு"

"சாமியாராப் போகணும்ங்கறயா" என்றாள் மகாலட்சுமி.